இலக்கியங்களில் சமூகக் கட்டமைப்பும் பெண்ணிய வாழ்வியலும் – விமர்சனப் பார்வை

மு. பிரதீபா
முனைவர் பட்ட ஆய்வாளர், துறைத்தலைவர்
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு

முனைவர் தெ. கீதா
முனைவர் பட்ட ஆய்வாளர், துறைத்தலைவர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ச் சமூக வாழ்வியலின் அடிப்படையில் பாரம்பரிய நம்பிக்கைகள் பெரிதும் இடம் பெற்றுள்ளன. அன்றாட வாழ்விலும் இந்நம்பிக்கைகள் இடம் பெறுகின்றன. அவை பண்பாட்டு அடையாளங்களாகக் கருதப்பட்டாலும் பெண்ணின் வாழ்வியல் சூழலில் மிகுந்த தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பெண்களின் அடிப்படை உரிமைகளான கல்வி, பொருளாதாரம், ஓய்வு, ஆகியவற்றில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி கற்பு, தாய்மை, குடும்பம், ஒழுக்கம் ஆகியவற்றையே பெண்களின் அடையாளங்களாகக் கற்பித்து வருகின்றன. இவ்வாறாக மூடநம்பிக்கைகளால் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தற்கால இலக்கியங்கள் பெண்ணிய மற்றும் பகுத்தறிவு கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பெண்களை சமூகக் கட்டமைப்பிலிருந்து விடுவிக்கத் தேவையான மறுபரிசீலனைகளை எடுத்துரைக்கின்றன.

ஆய்வு நோக்கம்

சமுதாயத்தில், பெண் வாழ்வியலில் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் ஏற்படுத்திய தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்தும், அந்நம்பிக்கைகள் பெண்ணின் கல்வி, பொருளாதாரம், உடலியல் மற்றும் உளவியல் ஆகியவற்றில் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளை ஆராய்ந்தும், இவை இக்கால இலக்கியங்களில் எவ்வாறு மறுபரிசீலனை செய்யப்படுகின்றன என்பதையும் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வானது பெண்ணிய விமர்சன அனுகுமுறையை அடிப்படையாக்க கொண்டு பழந்தமிழ் இலக்கியங்களில் பெண்களின் நிலை குறித்து ஆராய்ந்தும், பாரம்பரிய நம்பிக்கைகள் பெண் சமூக நிலையை எவ்வாறு வடிவமைத்தன என்பதை, காரண காரிய சிந்தனை முறையில் பகுப்பாய்வு செய்தும், பழைய நம்பிக்கைகளை பகுத்தறிவு கண்ணோட்டத்தின் மூலம் அனுகியும் ஆராயப்படுகிறது.

திறவுச் சொற்கள்: *சமுதாய நம்பிக்கைகள், பெண் வாழ்வியல் கட்டுப்பாடுகள், கற்பு, ஒழுக்கம், குடும்பம், பெண்ணியத்தில் ஏற்படுத்திய விளைவுகள், கல்வியின்மை, பொருளாதாரச் சிக்கல்கள், ஆணாதிக்கம், உடலியல் மற்றும் உளவியல் சிக்கல்கள், பெண்ணிய எழுச்சி, பகுத்தறிவு சிந்தனை, பெண்ணுரிமை.*

முன்னுரை

நம்பிக்கை எனப்படுவது மனித உளவியல் சார்ந்த விடயமாகும். தனிநபரோ, ஒரு அமைப்பைச் சார்ந்தவரோ ஏதெனும் ஒன்றின் மீது அல்லது ஒருவரின் மீதுள்ள பற்றின் காரணமாக அதன்மீது தீவிரமான நம்பிக்கை கொண்டிருப்பதாகும். அந்நம்பிக்கை உன்மையானதா? பொய்யானதா? அது, சரியானதா? துவறானதா? ஏன ஆராய்வதைத் தடுத்து அந்நிகழ்விற்கான உண்மைக் காரணம் யாதென அறியும் எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, பகுத்தறிவை ஏற்றுக்கொள்ளாத நிலையே மூடநம்பிக்கை எனப்படும்.

நம்பிக்கைகள் குறித்து ஸ்டூவர்ட் வைஸ்

நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தின் வழக்கமாக, காலம்காலமாக சந்ததியினருக்குக் கற்பிக்கப்பட்டும், வழியுறுத்தப்பட்டும் வருபவை, இவற்றை சடங்குகள் என்றும் குறிப்பிடுவர். இதனை ஸ்டுவர்ட் வைஸ் என்னும் உளவியளாளர் "மூடநம்பிக்கை பெரும்பாலும் பதற்றத்தைக் குறைக்கும் தற்காலிக, உளவியல் ரீதியான ஆறுதல் தரும் சடங்குகளாகவே செயல்படுகின்றன. இது நிஜத்தில் பகுத்தறிவற்றது என்றாலும், மன அமைதிக்காக மக்களால் பின்பற்றப்படுகிறது" என்று விளக்கமளிக்கிறார்.

தொல்காப்பியர் கால பெண்கள்

தொல்காப்பியர் காலம் முதலே தமிழர் வாழ்வு அகம், புறம் எனப் பாகுபடுத்தப்பட்டிருந்தது. அகவாழ்விற்கான களவு, கற்பு என்ற இருவகை பிரிவுகளை பெண்களுக்கு உரியதாய் அமைத்திருந்தனர். வீரமும், புகழும் நிறைந்த புறவாழ்வு ஆடவர்க்கு உரிதாக்கப்பட்டது. பெண் தன் வாழ்விடத்தை விட்டு நீங்காதவளாக இல்லறம் மட்டுமே புரியவேண்டும். கடல்கடந்து செல்லக்கூடாது என்ற நிலைப்பாடு இருந்துள்ளது.

"முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை"[1]

மாறாக பெண்கள் வீட்டில் இருந்தபடியே கற்பொழுக்கத்தைப் பேனுதல், அனைவரிடத்தும் அன்பைச் செழுத்துதல், மென்மை குணம் படைத்தவளாக இருத்தல், பொறுமை, நாணம் போன்ற குணங்களோடிருத்தல், விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாரைப் பேனுதல் போன்றவை வலியுறுத்தப்பட்டன. இதனை,

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்"[2]

சங்க இலக்கியத்தில்

சங்க இலக்கியத்தில் பெண் பல்வேறு அடையாளங்களுடன் உருவாக்கப்படுகிறாள். சங்க கால தமிழ்ச் சமுதாயம் தாய்வழி சமுதாயமாக இருப்பினும், ஆளுமை ஆண்களுக்கே உரித்தானதாக்கப்பட்டிருந்தது. பெண் குடும்ப கௌரவத்தைக் காப்பவளாக கற்பொழுக்கத்தைக் கடைபிடித்தும் இல்லறம் மட்டுமன்றி நல்லறம் பெறவேண்டி தினமும் அந்திப்பொழுதில் விளக்கேற்றி, நெல்லும் மலரும் தூவி வழிபாடு செய்யும் நம்பிக்கை இருந்து வந்துள்ளது.

"இதழ் அவிழ் பதம் கமழ பொழுது அறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈந்திரி கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய் கை தொழுது"[3]

இவ்வாறு வழிபாடு செய்யும் நம்பிக்கைகள் மட்டுமன்றி, மங்கல நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டுமெனில் அப்பெண்கள் புதல்வரைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஏன்பதையும், திருமணத்தின் போது வாழ்த்துவோர் மனமகளிடம் கற்பையும், பெற்றோரின் பெருமையையும் நிலைநாட்ட வலிறுத்துவதனை,

"புதல்வர் பயந்த தீதலை அவ்வயிற்று
வால் இலை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென"[4]

என்ற அகநானூற்றுப் பாடல்வழி அறியலாம்.

மேலும் குறிகேட்ட்ல், பெண்ணின் மனதிலுல்ல காதலை அறிய முற்படாமல் அவளுக்கு வெறியாட்டு நிகழ்த்துதல், மாதவிடாய் காலங்களில் பெண்கள் எந்த பொருளையும் தொடக்கூடாது என்ற கட்டுப்பாடுகளை விதித்தல், கனவனை இழந்த கைம்பெண்களின் நிலையுணராமை, உடன்கட்டை ஏறுதல் போன்ற நம்பிக்கைகள் பின்பற்றப்பட்டு வந்ததற்கான அடையாளங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

சங்கம் மருவிய காலத்து பெண்கள்

சுங்கம் மருவிய காலத்தில் சமயங்கள் பலவும் தோன்றியதன் விளைவாக மூடநம்பிக்கைகளும் மிகுதியாக வளர்ச்சி பெற்றது. பெண்கள் தங்களை ஆண்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்த போதிலும், சமுதாயத்தில் தனக்கான சுயத்தைப் பெறவில்லை. ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போன்றோர் இறைவனாலே சோதனை செய்யப்பட்டவர்களாவர். சிறந்த கற்பொழுக்கத்தைப் பேனும் பெண்களுக்கு "பத்தினி" என்ற புகழாரம் சூட்டினர். ஆனால் அதே சமுதாயத்தாரால் சீரழிக்கப்பட்ட பெண்களை "பரத்தை" என இழிவு படுத்தினர். இவ்வாறாக பெண்களின் கற்பு பலவாறாக சோதனைகளுக்குட்பட்டன. கற்புச் சோதனையில் வெற்றிபெற்ற அருந்ததி கற்பின் இலக்கணமாக போற்றப்படுகிறாள்.

"அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை"[5]

நீதி இலக்கியங்கள் பெண்களுக்கு ஆயிரமாயிரம் கற்பிதங்களை வலியுத்துவதோடு பெண் சமுதாயக் கட்டுப்பாடுகளை மீறினால் குடும்பத்தில் கஷ்டங்கள் ஏற்படும் என்ற போலித்தனத்தை உருவாக்கியதோடு பெண்களை வெறும் பாலியல் இயந்திரமகவும், போகப் பொருளாகவும் மட்டுமே பயன்படுத்தினர். மேலும் பெண்ணின் இயல்பான குணங்களையும் கட்டுப்படுத்தி, பெண்களுக்கான குணங்களையும் அற இலக்கியங்களே வறையறை செய்தன இதனை,

"தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"[6]

என்ற திருவள்ளுவரின் வரிகளில் காணலாம்.

நம்பிக்கைகள் ஏற்படுத்திய தாக்கங்கள்

இயற்கையால் ஏற்படும் சீற்றங்களின் காரணத்தை உணராத மனிதர்கள் அதனை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய சக்தியாக எண்ணினர். அதனை தெய்வமாக வழிபட்டதோடு தவறாது பூசைகள் செய்தல், உயிர்பலி கொடுத்தல், திருவிழா எடுத்தல், சடங்குகள் சம்பிரதாயங்கள் செய்தல் போன்றவற்றை மேற்க்கொண்டனர். இவை பிற்காலத்தில் மிகுதியான மூடநம்பிக்கைகளை ஏற்படுத்தக் காரணமாய் அமைந்தன. இவை பெண் வாழ்வியலில் புனிதத் தன்மையை போதித்ததோடு கட்டுப்பாடுகளையும் விதித்தன. இவை பெண் வாழ்வியல் உரிமைகளைப் பறித்து, ஆணாதிக்கப் போக்கிற்கு வழிகோலின. இதனை,

"பெண்ணின் உடல், ஆணின் உடைமையாக்கப்பட்டு, பெண் தன்னிலையற்றவளாக வாழ்கிறாள் என்பது பாலியல் அரசியல் கருத்தாக்கத்தின் கீழ் விவரிக்கப்படுகிறது எனலாம். புலியல் அரசியலில் செயலாகி வரும் அதிகாரம், பெண்ணின் பாலின, பாலியல் பாகுபாட்டின் உள்ளீடாகக் கருத இடமளிப்பதால் "அதிகாரம்" பற்றியும் அறிய வேண்டியதாகிறது. பாலியல் அரசியல்தான் ஆணுக்கு அதிகாரத்தை ஏற்படுத்துகிறது"[7]. ஏன்று பாலியல் அரசியலே பெண் அடிமைத்தனத்திற்கு முக்கிய பங்கு வகிப்பதை முனைவர் அரங்க. மல்லிகா அவர்களின் கருத்துக்களின் வழி உணரலாம்.

பெண் தன்னினைவு கொள்ளல்

பெண் பண்பாட்டுச் சூழலின் கட்டமைப்பில் மிகுந்த பாதிப்புகளை அடைந்தாள். காலச்சூழலின் மாற்றங்களினால் பெண் தன் நிலையை உணரத் தொடங்குகிறாள். அந்நிலையில் மேலைநாடுகளில் பெண்ணியக் கோட்பாடுகள் தோற்றம் பெற்று, அனைத்து பெண்களுக்கான உரிமைகளைக் கோரின. அதன் தாக்கங்கள் இந்திய சமுதாயத்திலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியதன் விளைவாக பெண் தன்னையும், தனக்கு ஏற்படும் அநீதிகளையும் உணரத் தொடங்கினாள்.

"தமிழ் இலக்கியத்தில், சமுக பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் இருத்தலை அறிந்துகொள்ளவும், அவர்களின் மீதான வன்முறையை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் உதவுகிறது"[8].

பெண்ணியக் கொள்கைகள்

பெண்ணின் வாழ்வியல் உரிமைகளுக்காகவும், பெண் சுயத்தைதை உணரவும், பொருளாதார அடிப்படையில் பெண் வளர்ச்சி அடையவும், பெண்ணிய விடுதலைச் சிந்தனையாளர்களும், பெண்ணியவாதிகளும் ஏற்படுத்திய இயக்கங்களை உணர்வது அவசியமாகும். பெண்ணிய இயக்கங்கள் மேலைநாடுகளின் தொழிற் புரட்சியால் தோன்றியதன்

விளைவாக பல்வேறு பரிமாணங்களைப் பெற்று முன்றாக பகுக்கப்பட்டுள்ளது.

1. தாராளவாதப் பெண்ணியம்
2. சோசலிசப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்

தமிழக பெண்ணிய முன்னோடிகள்

தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளுக்காக பல போராட்டங்களை சமுக சீர்த்திருத்தவாதிகள் முன்னெடுத்தனர். இதனால் சதி, பாலின பேதம், விதவைமுறை, சாதிய ஒடுக்குமுறை, ஆடை கட்டுப்பாடு, கல்வியுரிமையின்யை, கருத்து சுதந்திரமின்மை, குழந்தைத் திருமணம், தேவதாசி முறை, சாதிய ஒடுக்குமுறை போன்ற சமுதாயத்தின் மூடத்தனங்களுக்கு எதிர்ப்புக் குரல்கள் தோன்றின. வீட்டினிலே அடைபட்டுக் கிடந்த பெண்கள் தங்களின் உரிமைகளைப் பெற போராட்டங்களில் பங்குபெறத் தொடங்கினர்.

புாதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரனார் போன்றோர் தங்களின் படைப்புகளின் மூலமாக பெண்ணுரிமை, சொத்துரிமை, விதவை மறுமணம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தினர். இவ்வாறாக பெண்ணடிமைத்தனம் சிறிது சிறிதாக அழிவுற்று வருகிறது, பெண்கள் கல்வி பெறவும், வேலைக்குச் செல்லவும் துவங்கி விட்டனர். ஏன்பதை பாரதி மகிழ்ந்துரைப்பதனை,

> **"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்**
> **வீட்டுக்குள்ளே பெண்ணைப் புட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"[9]**

இவ்வரிகளால் அறியலாம்.

பெண்ணிய சீர்த்திருத்தவாதிகள்

தமிழகத்தில் பெண் சமத்துவம், சொத்துரிமை, பெண்கல்வி போன்றவற்றிற்காக பல சமுக சீர்த்திருத்தவாதிகள் போராடினர். மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, மணியம்மை, பெரியார், ஈ.வே. ராமசாமி போன்றோர் பெண்களின் சுயமரியாதை, பெண்கல்வி, மருத்துவம், சமத்துவம் ஆகியவற்றிற்காக பாடுபட்டதோடு, தேவதாசி முறை, குழந்தைத் திருமணம், தீண்டாமை போன்ற முட வழக்கங்களை ஒழிக்க போராடினர். இவர்களைப் போன்றோரின் முயற்சியே தமிழகத்தில் பெண்ணிய சிந்தனை உருவாக அடித்தளமாக அமைந்தன.

முடிவுரை

சங்க அகப்பாடல்களில், பெண்ணானவள் உணர்ச்சி குறித்து மிகுதியாக வெளிப்படுத்துவதாயும், மனம் சார்ந்த உணர்வு வலிமையைப் பெற்றிருப்பதாயும், குடும்பக் கட்டமைப்பில் மிகுந்த பொறுப்புடையவளாகவும்கட்டமைக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் ஆணாதிக்கக் கட்டுப்பாட்டிலிருந்தும் சமுக அதிகார அமைப்பிலிருந்தும் விடுதலை பெறவில்லை. சுமுக நம்பிக்கைகளான தெய்வ வழிபாடு, கற்பொழுக்கம், மரபு சார்ந்த நம்பிக்கைகள் ஆகியவையே சமுகத்தில் பெண் வாழ்வியலை நிர்ணயித்தன. இதனால் சங்க இலக்கியத்தை இன்றைய பெண்ணிய மற்றும் பகுத்தறிவு கண்ணோட்டத்தில் மறுபார்வையிடுவது சமுதாய மறுசீரமைப்பிற்கு வழிவகுப்பதாய் அமையும்.

அடிக்குறிப்பு

1. தொல், பொருள். பா.வரி: 37
2. தொல், பொருள். பா.வரி: 11-13
3. நெடு, பா.வரி: 41-43
4. அகம், பா.எண்: 86 (11-14)
5. சிலம்பு, மங்கல வாழ்த்து, பா.வரி : 26
6. திருக்குறள், இல்லறவியல், அதிகாரம்: 51(56)
7. தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், பக்: 13(7-12)
8. தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், பக்: 1(7-9)
9. பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக் கும்மி, பா.வரி: 5-6

துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியம் (மூலமும் உரையும்) - ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சிலப்பதிகாரம் - பதிப்பு: 2008, ந.மு.வேங்கடசாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. திருக்குறள் - பாரி நிலையம், சென்னை

4. *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும் - அரங்க மல்லிகா, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.*
5. *தொல்காப்பியம் (பொருளதிகாரம்) - பதிப்பு - 2013, கதிர் பதிப்பகம், திருவையாறு.*
6. *பாரதியார் கவிதைகள் - நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை*